| சாட்சி : PW 2<br>ராமநாதன் | அ.வ.எண். 380/2010 | 26.03.2025 |
|---|---|---|

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

11) வா.சா.ஆ.8 ல் கண்டுள்ள உட்பிரிவுகள் வழக்கிற்கு பின்னிட்டு கடந்த 15.12.2022 ல் ஏற்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல, ஏற்கனவே இருந்த ஆவணத்தின் அடிப்படையில் தான் போட்டுள்ளார்கள். வா.சா.ஆ.8 ஆவணத்தில் TK.No.24/2022 என்று கண்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. வருவாய்துறை ஆவணங்கள் எதன் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டது என்பதை பொறுத்த ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வருவாய் துறையில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுத்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். புல வரைபடத்தில் திருத்தம் செய்ததை பொறுத்த உத்தரவு நகல் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

12) நான் மனு கொடுத்ததன் பேரில் புல வரைபடத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ 8 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்களில் எங்களது சொத்திற்கு அருகில் உள்ள மனைகள் எதுவும் உட்பிரிவு செய்யப்பட்டதாக காட்டப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உரிய ஆவணங்கள் இல்லாமல் தரப்பினர்களை முறையாக விசாரணை செய்யாமல் வருவாய் துறையினரை வைத்து ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளேன் என்றாலும் மேற்படி ஆவணங்கள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் 30 ஆண்டுகளாக பூஸ்துதியில் பாதை இருந்திருந்தால் அதை நிரூபணம் செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் அதுபற்றி எனக்கு

தெரியாது. பிரதிவாதிகள் ஆவணத்தில் பாதை என்று கண்டுள்ளதை நாங்கள் பயன்படுத்தி கொண்டு நாங்கள் 2 அடிபாதை விட்டுள்ளோம் என்று கூறி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, எனது ஆவணங்கள் அடிப்படையில் பாதை உள்ளது. தனிப்பட்ட நபருடைய இடத்தில் பாதை உரிமை கோர இயலாது என்றாலும் எனவே எங்களது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. வருவாய் ஆவணங்கள் முறைப்படி ஏற்படாத காரணத்தினால் பாதை என்று ஏற்பட்டுள்ள திருத்தங்கள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி காரணத்தினால் எனது தந்தை தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.